செய்தி வெளியீடு எண்: 977 நாள்: 04.11.2010

<u>செய்தி வெளியீடு – 4.11.2010</u>

# பண்ணை சாராக் கடனுக்கு 6 சதவீத வட்டிச் சலுகை! 31.12.2011 வரை நீட்டித்து முதலமைச்சர் கலைஞர் ஆணை!

விவசாயிகளின் துயர்துடைக்க இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு, நிலுவையிலிருந்த அனைத்து விவசாயக் கடன்களையும் ரத்து செய்து ஆணையிட்டது. இதைத் தொடர்ந்து, விவசாயம் அல்லாத அதாவது விசைத்தறி, செங்கல் சூளை போன்ற பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்டு, பல ஆண்டுகளாக நிலுவையில் இருந்த பண்ணை சாராக் கடன் சுமையைக் குறைப்பதற்காக, 31.3.2007 அன்று தவணை தவறிய கடன் அனைத்திற்கும் அவர்கள் ஏற்கனவே செலுத்தி வந்த 12 சதவீத வட்டியை 6 சதவீதமாகக் குறைத்தும், அபராத வட்டியை முழுமையாகத் தள்ளுபடி செய்தும் ஆணையிடப்பட்டது.

இந்த வட்டிச் சலுகையைப் பயன்படுத்தி கடன் பெற்றோர், கடனைத் திருப்பிச் செலுத்த 31.3.2010 வரை அவகாசம் அளிக்கப்பட்டது. அரசு பல்வேறு கட்டங்களில் வழங்கிய சலுகைகளின் மூலமாக 31.3.2007 அன்று இருந்த தவணை தவறிய கடன் தொகை 931 கோடி ரூபாய் என்பது 411 கோடியே 32 இலட்சம் ரூபாய் ஆகக் மாற்றியமைக்கப்பட்டு, இதனால் ஏற்படும் இழப்பீட்டை அரசும், சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களும் ஈடு செய்துகொள்ள அரசு ஆணையிட்டது. இந்த நிலுவைத் தொகையில் வழங்கப்பட்ட காலக்கெடுவான 31.3.2010 வரை 200 கோடியே 44 இலட்சம் ரூபாய் வசூல் செய்யப்பட்டது.

இந்தக் கடன் சலுகையைப் பயன்படுத்திக் கொள்ள வழங்கப்பட்ட கால அவகாசம் போதுமானதாக இல்லை என்றும், இந்தக் கடனை திருப்பிச் செலுத்த வழங்கப்பட்ட சலுகைத் திட்டம் நீட்டிக்கப்பட வேண்டும் என்றும், பொது மக்களிடம், குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களிடம் இருந்து வந்த கோரிக்கையைக் கருத்தில் கொண்டு, 31.3.2007 அன்று தவணை தவறி நிலுவையிலுள்ள பண்ணை சாராக் கடனை அசலுடன் 6 சதவீத வட்டி மட்டுமே திரும்பச் செலுத்தினால் போதும் என்ற சலுகை, 31.12.2011 வரை மேலும் ஓராண்டுக்குமேல் நீட்டிக்க மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இன்று (4.11.2010) ஆணையிட்டுள்ளார்கள்.

• * *

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9